2014 ஜூலை 24]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியிருந்த பாலம் கட்டுவது குறித்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 248, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

248—

கால்நடைக் கிளை நிலையம்

***33892—திரு. வீ.பி. நாகைமாலி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்வேளூர் தொகுதி, காரப்பிடாகை வடக்கு ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கீழ்வேளூர் தொகுதி, காரப்பிடாகை வடக்கு ஊராட்சி ஒன்றியத்திலே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். கால்நடைத் துறை விதிகளுக்குட்பட்டு அப்பகுதியில் 3,000-க்கும் குறைவாக கால்நடைகள் உள்ளதால், அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்வேளூர் தொகுதி, காரப்பிடாகை வடக்கு ஊராட்சியைச் சுற்றியுள்ள திருப்பூண்டி உள்ளிட்ட கிராமங்களில் ஏராளமான கால்நடைகள் உள்ளன. இப்பகுதி மக்கள் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கவேண்டுமானால், தொலைவில் இருக்கிற விழுந்தமாவடி அல்லது கருங்கன்னி கிராமங்களிலுள்ள கால்நடைக் கிளை நிலையங்களுக்குச் செல்லவேண்டியுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, காரப்பிடாகை வடக்கு அல்லது அதற்குப் பக்கத்தில் உள்ள திருப்பூண்டி ஆகிய இடங்களில் ஏதாவது ஓர் இடத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக பட்ஜெட் வரலாற்றிலேயே முதன்முறையாக கால்நடை பராமரிப்புத் துறைக்கு ரூ.1,000 கோடிக்குமேல், அதாவது 1,069 கோடி ரூபாயை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, கால்நடைத் துறை விதிகளின்படி, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற காரப்பிடாகை வடக்கு ஊராட்சியில் கால்நடைகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லையென்று சொன்னாலும், அதன் அருகிலுள்ள ஊராட்சியையும் இணைத்து துறை ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வீ.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரப்பிடாகை அல்லது அதற்குப் பக்கத்தில்*

2014 ஜூலை 24]

இருக்கின்ற திருப்பூண்டி ஆகிய ஏதாவது ஓர் இடத்தில் ஒரு கால்நடை நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வந்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மீதமுள்ள வினாக்கள் நாளை எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) பெரியபாளையம் அருகே இரண்டு கிராம மக்களிடையே நடைபெற்ற மோதல் சம்பவம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் அருகே இரண்டு கிராம மக்களிடையே 22–7–2014 அன்று நடைபெற்ற மோதல் குறித்து தே.மு.தி.க. கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி.எச். சேகர், திரு. ர.ம. பாபு முருகவேல், திரு. அ. பாஸ்கர், திரு. எல். வெங்கடேசன் ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. ஆர். ராமமூர்த்தி, திரு. வீ.பி. நாகைமாலி ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சு. குணசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. வெ. பொன்னுப்பாண்டி, திரு. கு. லிங்கமுத்து, திரு. ந. நஞ்சப்பன், திரு. டி. இராமச்சந்திரன், திரு. பி.எல். சுந்தரம் ஆகியோரும், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்களும், மனித நேய மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. அ. அஸ்லம் பாஷா ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் மற்றும் புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் சட்டமன்றப் பேரவை*